Sl. No. : 21239945

**JSTT3**

பதிவு எண் | | | | | | | | |

# 2014

# பொதுத் தமிழும் பொது அறிவும்

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத் தொகுப்பு ஒரு மேலுறையை (இந்த பக்கத்தை)க் கொண்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத்தொகுப்பைத் திறக்கும்படி கண்காணிப்பாளர் கூறும் வரையில் மேலுறையைத் திறக்கக் கூடாது. வினாத்தொகுப்பைத் திறக்கும்படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் மேலுறையின் வலதுபுறத்தை கவனமாக கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத் தொகுப்பு **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் விடுபடாமல், வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் ஏதேனும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்.
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளைக் குறித்துக் காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு கண்காணிப்பாளரால் தனியாகத் தரப்படும்.
6. உங்களுடைய பதிவு எண், தேர்வு பாடக் குறியீடு மற்றும் வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) முதலியவற்றை விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விவரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ Ⓑ Ⓒ மற்றும் Ⓓ என நான்கு விடை வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடை வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிறமையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும். உதாரணமாக நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ
9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. <u>தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.</u>
10. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
11. மேற்கண்ட விதிகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.
12. 101 முதல் 200 வரையிலான வினாக்களில் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
13. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.

ENGLISH VERSION OF INSTRUCTIONS IS PROVIDED ON THE BACK COVER OF THIS BOOKLET

SEAL

[Turn over

1. 'கண்ணகி' எனும் சொல்லின் பொருள்

(A) கடும் சொற்களைப் பேசுபவள்

(B) கண் தானம் செய்தவள்

(C) கண்களால் நகுபவள்

(D) கண் தானம் பெற்றவள்

2. பகுதி I உடன் பகுதி II ஐப் பொருத்துக.

| | பகுதி I | | பகுதி II |
|---|---|---|---|
| (a) | குறிஞ்சி | 1. | நெல்லரிதல் |
| (b) | முல்லை | 2. | கிழங்ககழ்தல் |
| (c) | மருதம் | 3. | உப்பு விற்றல் |
| (d) | நெய்தல் | 4. | வரகு விதைத்தல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 1 | 3 | 2 | 4 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

3. வண்ணம், வடிவம், அளவு, சுவை என இந்த நான்கும் எதனோடு தொடர்புடையது?

(A) பண்புத் தொகை

(B) வினைத் தொகை

(C) வேற்றுமைத் தொகை

(D) உம்மைத் தொகை

4. வெண்டளை விரவிய கலிவெண்பாவால் பாடப்படுவது எது?

(A) பள்ளு

(B) தூது

(C) கலம்பகம்

(D) அந்தாதி

5. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | வினைத் தொகை | 1. | நாலிரண்டு |
| (b) | உவமைத் தொகை | 2. | செய்தொழில் |
| (c) | உம்மைத் தொகை | 3. | பவள வாய் பேசினாள் |
| (d) | அன்மொழித் தொகை | 4. | மதிமுகம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

6. 'அவன் உழவன்' – என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

(A) தெரிநிலை வினைமுற்று

(B) குறிப்பு வினைமுற்று

(C) பெயர்ச் சொல்

(D) தொழிற்பெயர்

7. பிழையற்ற வாக்கியத்தைக் கூறுக.

(A) வயலில் மாடுகள் மேந்தது

(B) வயலில் மாடுகள் மேஞ்சது

(C) வயலில் மாடுகள் மேய்ந்தன

(D) வயலில் மாடுகள் மேய்ந்தது

8. பெயர்ச் சொல்லின் வகையறிதல் : நடிகன்

(A) பொருட்பெயர்

(B) பண்புப்பெயர்

(C) தொழிற்பெயர்

(D) காலப்பெயர்

9. பொன்னியிடம் தேன்மொழி தான் மறுநாள் மதுரைக்குச் செல்வதாகக் கூறினாள் – எவ்வகைத் தொடர்?

(A) நேர்க்கூற்று

(B) அயற்கூற்று

(C) எதிர்மறைக் கூற்று

(D) கலவைத்தொடர்

10. பொருந்தாத சொல்லை தேர்வு செய்க

(A) பெறா அ

(B) தழிஇ

(C) அண்ணன்

(D) கொடுப்பதூஉம்

11. யாப்பு என்றால் —————————— என்பது பொருள்

(A) அடித்தல்

(B) சிதைத்தல்

(C) கட்டுதல்

(D) துவைத்தல்

12. நாயக்கர் மரபில் முடிசூட்டிக் கொண்ட பெண்ணரசி யார்?

(A) மங்கையர்க்கரசி

(B) ஜான்ஸிராணி

(C) இராணி மங்கம்மாள்

(D) தடாதகைப் பிராட்டியார்

13. 'உலகின் எட்டாவது அதிசயம்' எனப் பாராட்டப்படுபவர்

(A) நைட்டிங்கேல்

(B) அன்னி சல்லிவான்

(C) கெலன் கெல்லர்

(D) பாலி தாம்சன்

14. திருக்குறளுக்கும் எந்த எண்ணிற்கும் பெரிதும் தொடர்புள்ளது?

(A) 9

(B) 7

(C) 10

(D) 133

15. தொண்ணூற்று ஒன்பது வகையான பூக்களின் பெயர்கள் இடம் பெறும் நூல் எது?

(A) குறிஞ்சிப் பாட்டு

(B) முல்லைப் பாட்டு

(C) கலிப்பாடல்

(D) பரிபாடல்

16. 'மனித நாகரிகத்தின் தொட்டில்' என அழைக்கப்படுவது எது?

(A) ஆப்பிரிக்கா

(B) இலெமூரியா

(C) சிந்து சமவெளி

(D) ஹரப்பா

17. குமரகுருபரர் எழுதாத நூல்

(A) கந்தர் கலிவெண்பா

(B) மதுரைக் கலம்பகம்

(C) திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்

(D) நீதிநெறி விளக்கம்

18. தாயுமானவர் நினைவு இல்லம் எந்த மாவட்டத்தில் உள்ளது?

(A) தஞ்சாவூர்

(B) நாகப்பட்டினம்

(C) இராமநாதபுரம்

(D) புதுக்கோட்டை

19. தமிழகத்தின் 'வேர்ட்ஸ்வொர்த்' என்று புகழப்படுபவர்

(A) வாணிதாசன்

(B) வண்ணதாசன்

(C) பாரதிதாசன்

(D) சுப்புரத்தின தாசன்

20. குளிர்பதனப் பெட்டியில் பயன்படுத்தப்படும் ____________ உயிர்வளிப்படலத்தைச் சிதைப்பதில் பெரும்பங்கு வகிக்கிறது.

(A) குளோரோ ஃபுளுரோ கார்பன்

(B) ஈத்தேன்

(C) கதிரியக்கம்

(D) மீத்தேன்

21. 'திராவிடம்' என்னும் சொல்லை முதன்முதலில் உருவாக்கியவர்

(A) பெரியார்

(B) குமரிலபட்டர்

(C) கால்டுவெல்

(D) ஜி.யு. போப்

22. 'சீர்திருத்தக் காப்பியம்' என்று பாராட்டப்படுவது

(A) சிலப்பதிகாரம்
(B) மணிமேகலை
(C) வளையாபதி
(D) குண்டலகேசி

23. ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?

(A) நற்றிணை, கலித்தொகை
(B) பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி
(C) குறுந்தொகை, ஐங்குறுநூறு
(D) பரிபாடல், மலைபடுகடாம்

24. சரிந்த குடலைப் புத்தத் துறவியர் சரிசெய்த செய்தியைக் கூறும் நூல்

(A) பெருங்கதை
(B) குண்டலகேசி
(C) நாககுமார காவியம்
(D) மணிமேகலை

25. பொருத்துக :

(a) நான்மணிமாலை — 1. கவிதை
(b) மலரும் மாலையும் — 2. சிற்றிலக்கியம்
(c) நான்மணிக்கடிகை — 3. காப்பியம்
(d) தேம்பாவணி — 4. நீதிநூல்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

26. 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' — யார் கூற்று?

(A) பாரதியார்
(B) பாரதிதாசன்
(C) கண்ணதாசன்
(D) முடியரசன்

27. கூடுகட்டி வாழும் பாம்பு எது?

(A) நல்ல பாம்பு
(B) இராஜ நாகம்
(C) பச்சைப் பாம்பு
(D) எதுவுமில்லை

28. மணிமேகலையில் விருச்சிக முனிவரால் பசிநோய் சாபம் பெற்றவள் யார்?

(A) சுதமதி
(B) மணிமேகலை
(C) ஆதிரை
(D) காயசண்டிகை

29. 'தென்னிந்தியாவின் ஏதென்ஸ்' என்னும் புகழ்மிக்க நகரம்

(A) மதுரை
(B) ஊட்டி
(C) கொடைக்கானல்
(D) ஏற்காடு

30. 'சதகம்' என்பது —————— பாடல்களைக் கொண்ட நூலைக் குறிக்கும்

(A) ஐம்பது
(B) நூறு
(C) ஆயிரம்
(D) பத்தாயிரம்

31. ''கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்...''

– இவ் அடி மூலம் அனுமன் பெற்ற புகழ்ப்பெயர்

(A) சொல்லின் நாயகன்

(B) சொல்லின் தலைவன்

(C) சொல்லின் புலவன்

(D) சொல்லின் செல்வன்

32. 'சிங்கங்களே! எழுந்து வாருங்கள். நீங்கள் செம்மறி ஆடுகள் என்ற மயக்கத்தை உதறித் தள்ளுங்கள்' எனக் கூறியவர்? –

(A) பார்திதாசன்

(B) விவேகானந்தர்

(C) சுபாஷ் சந்திர போஸ்

(D) திலகர்

33. 'சொல்லாதன இல்லை பொதுமறையான திருக்குறளில்' – இவ்வடியைப் பாடியவர்

(A) பாரதியார்

(B) பாரதிதாசன்

(C) கவிமணி

(D) சுரதா

34. பொருத்தமான விடையை எழுதுக : 'துன்பத்தையும் நகைச்சுவையோடு சொல்வதில் வல்லவர்' –

(A) அந்தகக் கவி

(B) இராமச்சந்திர கவிராயர்

(C) திருவள்ளுவர்

(D) உடுமலை நாராயணக் கவி

35. 'களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' – என்று கூறியவர்

(A) ஒக்கூர் மாசாத்தியார்

(B) பொன்முடியார்

(C) காவற்பெண்டு

(D) ஔவையார்

36. அழுது அடியடைந்த அன்பர் ————————.

(A) மாணிக்கவாசகர்

(B) வாகீசர்

(C) சரபேசர்

(D) மதுரேசர்

37. மறைமலை அடிகள் தாம் நடத்தி வந்த 'ஞானசாகரம்' இதழைத் தூய தமிழில் எங்ஙனம் பெயர் மாற்றம் செய்தார்?

(A) ஞானக் கடல்

(B) அறிவுக் கடல்

(C) அறிவு சாகரம்

(D) நாணக் கடல்

38. 'ஜல்லிக்கட்டு' என்னும் எருதாட்டத்தை வைத்து 'வாடிவாசல்' எனும் நாவலை எழுதியவர் ————————.

(A) சி.சு. செல்லப்பா

(B) பி.எஸ். ராமையா

(C) திரு. வி. க.

(D) வ. வே. சு. ஐயர்

39. திருமணம் செல்வக் கேசவராய முதலியார் தமிழின் எப்பிரிவுக்கு மிகவும் தொண்டு செய்தார்?

(A) செய்யுள்

(B) உரைநடை

(C) இலக்கணம்

(D) நாடகம்

40. 'தமிழ் உரைநடையின் தந்தை' என மெச்சத் தகுந்தவர்

(A) யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர்

(B) சி.வை. தாமோதரம் பிள்ளை

(C) விபுலானந்த அடிகள்

(D) கனகசபைப் புலவர்

41. 'முத்தொள்ளாயிரம்' – இவர்களைப் பற்றிய புகழ்ப் பாடல்கள்

(A) சேர, சோழ, பாண்டியர்

(B) பல்லவர், நாயக்கர், பாளையக்காரர்

(C) முகமதியர், ஆங்கிலேயர், மராட்டியர்

(D) குப்தர், மௌரியர், டச்சுக்காரர்

42. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | சிக்கனம் | 1. | கவிஞர் தாரா பாரதி |
| (b) | மனிதநேயம் | 2. | ஆலந்தூர் கோ. மோகனரங்கம் |
| (c) | காடு | 3. | சுரதா |
| (d) | வேலைகளல்ல வேள்விகளே | 4. | வாணிதாசன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

43. 'மணிமேகலை வெண்பா'வின் ஆசிரியர் யார்?

(A) பாரதியார்

(B) பாரதிதாசன்

(C) திரு. வி. க.

(D) கவிமணி

44. 1942 – ல் பர்மாவிலிருந்து புறப்பட்டு இந்தியா வந்து சேர்ந்ததை விவரிக்கும் மிகச் சிறந்த பயண நூலான 'பர்மா வழி நடைப்பயணம்' நூலின் ஆசிரியர்

(A) வைத்தியநாத சர்மா

(B) வெ. சாமிநாத சர்மா

(C) தேவன்

(D) அநுத்தமா

45. 'ஆனந்தத்தேன்' நூலின் ஆசிரியர்

(A) வைரமுத்து

(B) தமிழன்பன்

(C) புதுமைப் பித்தன்

(D) க. சச்சிதானந்தன்

46. அடைமொழிக்குரிய ஆசிரியர்களைத் தேர்க :

(a) விடுதலைக்கவி 1. அப்துல் ரகுமான்

(b) திவ்வியகவி 2. வாணிதாசன்

(c) கவிஞரேறு 3. பாரதியார்

(d) கவிக்கோ 4. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 1 | 3 | 4 | 2 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

47. பொருத்துக :

(a) பூங்கொடி 1. கண்ணதாசன்

(b) கொடி முல்லை 2. சுரதா

(c) ஆட்டனத்தி ஆதிமந்தி 3. முடியரசன்

(d) பட்டத்தரசி 4. வாணிதாசன்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

48. வடமொழியில் முகுந்தமாலை என்னும் நூலை இயற்றியவர் ————

(A) திருமங்கையாழ்வார் (B) திருமழிசையாழ்வார்

(C) குலசேகராழ்வார் (D) நம்மாழ்வார்

49. 'பஃறுயி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்

குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள' என்ற வரிகள் இடம் பெற்ற நூல்

(A) மணிமேகலை (B) சிலப்பதிகாரம்

(C) சீவகசிந்தாமணி (D) பெரியபுராணம்

50. திருக்குறளை முதன் முதலில் பதிப்பித்துத் தஞ்சையில் வெளியிட்டவர்

(A) பாவலரேறு பெருஞ்சித்திரனார் (B) மலையத்துவசன் மகன் ஞானப்பிரகாசம்

(C) சிவப்பிரகாசம் (D) மணிவாசகர்

51. வெற்பு, சிலம்பு, பொருப்பு – ஆகிய சொற்கள் குறிக்கும் பொருள்

(A) நிலம்

(B) மலை

(C) காடு

(D) நாடு

52. 'நெடிலோ டுயிர்த் தொடர்க்குற் றுகரங்களுள்
பறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே'
– இவ்விதிக்குச் சான்றைத் தேர்க.

(A) இரட்டுற மொழிதல்

(B) வட்டப் பலகை

(C) கட்டுச் சோறு

(D) காட்டுக் கோழி

53. 'முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை' – இதில் மகடூஉ என்பது ————

(A) மகள்

(B) மகன்

(C) பெண்

(D) ஆண்

54. தொடை விகற்பம் எத்தனை வகைப்படும்?

(A) 40

(B) 35

(C) 25

(D) 45

55. கீழ்க்கண்டவற்றுள் எது சரி?

(A) தொகா, தொகை நிலைத் தொடர் 7

(B) தொகை, தொகா நிலைத் தொடர் 9

(C) தொகை நிலைத் தொடர் 6; தொகா நிலைத் தொடர் 9

(D) தொகை நிலைத் தொடர் 9; தொகா நிலைத் தொடர் 6

56. ஐ, ஔ ஆகிய 2 எழுத்துகளும் அழைக்கப்படும் விதம்

(A) அளபெடை

(B) எழுத்துப்பேறு

(C) இதழ்குவி எழுத்து

(D) சந்தியக்கரம்

57. முற்றியலுகரச் சொல்லை எழுதுக.

(A) மாடு

(B) மூக்கு

(C) கதவு

(D) மார்பு

58. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் 'ஒரு பொருட் பன்மொழிச்' சொல்லைத் தேர்க.

(A) மீமிசை ஞாயிறு
(B) உயர்ந்த கட்டடம்
(C) மேல் பகுதி
(D) மையப் பகுதி

59. 'பெறு' என்ற வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடு :

(A) பெற்றான்
(B) பெறுவான்
(C) பெறுகிறான்
(D) பெறுபவன்

60. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | இலக்கணமுடையது | 1. | புறநகர் |
| (b) | மங்கலம் | 2. | கால் கழுவி வந்தான் |
| (c) | இலக்கணப் போலி | 3. | இறைவனடி சேர்ந்தார் |
| (d) | இடக்கரடக்கல் | 4. | நிலம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

61. அந்தந்த அடிகளில் உள்ள சொற்களை முன்பின்னாக மாற்றிக் கொள்வது – எவ்வகைப் பொருள்கோள்?

(A) அடிமறி மாற்றுப் பொருள்கோள்
(B) அளைமறிபாப்புப் பொருள்கோள்
(C) கொண்டு கூட்டுப் பொருள்கோள்
(D) மொழிமாற்றுப் பொருள்கோள்

62. பொருள் தேர்க :

அங்காப்பு – என்பது

(A) வாயைப் பிளத்தல்
(B) அங்கம் காப்பு
(C) அகம் காத்தல்
(D) வாயைத் திறத்தல்

63. வினைமுற்றை தேர்க

(A) படி

(B) படித்த

(C) படித்து

(D) படித்தான்

64. தவறான ஒன்றை தேர்க

(A) கிறு

(B) கின்று

(C) ஆ நின்று

(D) இல

65. 'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' எனப் பாடியவர்

(A) பாரதியார்

(B) சுரதா

(C) பாரதிதாசன்

(D) வாணிதாசன்

66. இப்போதுள்ள கல்வெட்டுகளிலேயே மிகப் பழமையானது

(A) உத்திரமேரூர்க் கல்வெட்டு

(B) ஆதிச்சநல்லூர்க் கல்வெட்டு

(C) அரியாங்குப்பம் கல்வெட்டு

(D) திருநாதர் குன்றம் கல்வெட்டு

67. காந்தியடிகளை 'அரை நிருவாணப் பக்கிரி' என ஏளனம் செய்தவர்.

(A) சர்ச்சில்

(B) முசோலினி

(C) ஹிட்லர்

(D) ஸ்மட்ஸ்

68. 'ஏழையின் குடிசையில் அடுப்பும் விளக்கும் தவிர எல்லாமே எரிகின்றன' – இதனை பாடிய கவிஞர் யார்?

(A) ந.பிச்சமூர்த்தி

(B) வல்லிக்கண்ணன்

(C) புதுமைப்பித்தன்

(D) சி.சு.செல்லப்பா

69. 'கலம்பகம் பாடுவதில் புகழ் பெற்றவர்' யாவர்?

(A) இரட்டையர்

(B) சமணர்

(C) பரணர்

(D) பௌத்தர்

70. 'இந்திய அரசியலில் சாணக்கியர்' ——————————.

(A) ஜவஹர்லால் நேரு

(B) வல்லபாய் படேல்

(C) இராஜகோபாலாச்சாரியார்

(D) இராதா கிருட்டிணன்

71. ஆன்ம ஈடேற்றத்தை விரும்பும் பயணம் குறித்த நூல்

(A) இரட்சணிய யாத்திரிகம் (B) இரட்சணிய மனோகரம்

(C) இரட்சணிய குறள் (D) இரட்சணிய சரிதம்

72. "எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம் நோக்கி நடக்கின்ற திந்தவையம்" எனப் பொதுவுடைமையை விரும்பியவர்

(A) கல்யாண சுந்தரம் (B) பாரதிதாசன்

(C) முடியரசன் (D) தமிழ்ஒளி

73. "திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி தமிழ்ச் செம்மொழியாம்" – என்று செம்மொழிக்கு இலக்கணம் வகுத்தவர்

(A) பரிதிமாற் கலைஞர் (B) நாமக்கல் கவிஞர்

(C) பாரதியார் (D) பாரதிதாசன்

74. ஐஞ்சிறு காப்பியங்கள் அனைத்தும் யாரால் இயற்றப்பட்டன?

(A) சைவரால் இயற்றப்பட்டன (B) வைணவரால் இயற்றப்பட்டன

(C) சமணரால் இயற்றப்பட்டன (D) கிறித்தவர்களால் இயற்றப்பட்டன

75. பெர்சிவல் பாதிரியாரின் வேண்டுகோளை ஏற்று பைபிளைத் தமிழில் பெயர்த்த அறிஞர்

(A) வேத நாயகம் பிள்ளை (B) வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

(C) பேராசிரியர் சுந்தரம் பிள்ளை (D) ஆறுமுக நாவலர்

76. இதழ், நா, பல், அண்ணம் – இவை

(A) ஒலி பிறப்புகள்

(B) ஒலிப்பு முறைகள்

(C) ஒலிப்பான்கள்

(D) ஒலிப்பு முனைகள்

77. 'ஸ்ரீவைஷ்ணவத்தின் வளர்ப்புத் தாய்' எனப் போற்றப்படுபவர்

(A) ஆண்டாள்

(B) பேயாழ்வார்

(C) பெரியாழ்வார்

(D) இராமானுஜர்

78. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பது —————— நூலின் புகழ்மிக்க தொடர்

(A) திருமந்திரம்

(B) திருவாசகம்

(C) திருக்குறள்

(D) தேம்பாவணி

79. மருத நிலத்திற்குரிய தெய்வம்

(A) இந்திரன்

(B) முருகன்

(C) திருமால்

(D) வருணன்

80. 'தாண்டக வேந்தர்' என அழைக்கப்படுபவர் யார்?

(A) சுந்தரர்
(B) திருநாவுக்கரசர்
(C) மாணிக்க வாசகர்
(D) திருஞான சம்பந்தர்

81. 'தேசியம் காத்த செம்மல்' – எனத் திரு.வி.க. வால் புகழப்பட்டவர்

(A) பசும்பொன் முத்துராமலிங்கர்
(B) காந்தியடிகள்
(C) திருப்பூர்குமரன்
(D) வீரபாண்டிய கட்டபொம்மன்

82. 'சின்னச் சீறா' என்ற நூலை எழுதியவர்

(A) உமறுப் புலவர்
(B) குணங்குடி மஸ்தான்
(C) பனு அகமது மரைக்காயர்
(D) அப்துல் ரகுமான்

83. காந்தியக் கவிஞர் என அழைக்கப்படுபவர் யார்?

(A) இராமலிங்கம் பிள்ளை
(B) கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை
(C) பாரதியார்
(D) நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார்

84. 'ஆ' – முதன்முதலில் எந்நிலத்திற்குரிய விலங்கு?

(A) குறிஞ்சி
(B) முல்லை
(C) நெய்தல்
(D) மருதம்

85. ''கடவுள் வல்கை யோடுனை மாய்த்துடல்
புட்கிரை யாக ஒல்செய்வேன்''
– இந்த வீரவரிகள் இவரால் கூறப்பட்டன

(A) தாவீது
(B) கோலியாத்து
(C) சவுல் மன்னன்
(D) சூசை

86. இதன் பட்டையை அரைத்துத் தடவினால் முரிந்த எலும்பு விரைவில் கூடும்

(A) முருங்கைப் பட்டை (B) வேப்பம் பட்டை

(C) புளியம் பட்டை (D) நாவற் பட்டை

87. "வீரம் இல்லாத வாழ்வும் விவேகமில்லாத வீரமும் வீணாகும்" – என எடுத்துரைத்தவர்

(A) சுபாஷ் சந்திரபோஸ் (B) பசும்பொன் முத்துராமலிங்கர்

(C) வீரபாண்டிய கட்டபொம்மன் (D) வேலுத்தம்பி

88. பட்டியல் I – ல் உள்ள ஆங்கிலப் பழமொழிக்குப் பொருத்தமான பட்டியல் II – ல் உள்ள தமிழ்ப் பழமொழியோடு பொருத்தி குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்க.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | First deserve, then desire | 1. | அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் |
| (b) | Tit for tat | 2. | செய்யும் தொழிலே தெய்வம் |
| (c) | Work is worship | 3. | முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா? |
| (d) | Little strokes fell great oaks | 4. | பழிக்குப் பழி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

89. பொருத்துக : – சரியான விடையைத் தேர்ந்தெடு

| | சொல் | | பொருள் |
|---|---|---|---|
| (a) | விசும்பு | 1. | தந்தம் |
| (b) | மருப்பு | 2. | வானம் |
| (c) | கனல் | 3. | யானை |
| (d) | களிறு | 4. | நெருப்பு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

90. திருக்காவலூர்க் கலம்பகம் இவரால் எழுதப்படவில்லை

(A) வீரமாமுனிவர்

(B) தைரியநாத சாமி

(C) கொன்ஸ்டான் ஜோசப் பெஸ்கி

(D) ஜி.யு. போப்

91. "கம்பனைக் கற்கக் கற்க, கவிதையின்

சீரிய இயல்புகளை அறியலாம்" – இப்படிக் கூறியவர்

(A) சி.வை. தாமோதரம் பிள்ளை

(B) எஸ். வையாபுரிப் பிள்ளை

(C) ஆளுடைய பிள்ளை

(D) 'கம்பன் அடிப்பொடி' சா. கணேசனார்

92. பம்மல் சம்மந்த முதலியார் எழுதாத நாடகம்

(A) மனோகரா

(B) சபாபதி

(C) பவளக்கொடி

(D) பொன் விலங்கு

93. திருக்குறள், திருவாசகம், நாலடியார் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்

(A) கால்டுவெல்

(B) ஜி.யு. போப்

(C) ஜோசப் பெஸ்கி

(D) தெ நொபிலி

94. பொருத்துக

| | நூல் | | ஆசிரியர் |
|---|---|---|---|
| (a) | ஆசாரக்கோவை | 1. | கூடலூர் கிழார் |
| (b) | கார் நாற்பது | 2. | விளம்பி நாகனார் |
| (c) | முதுமொழிகாஞ்சி | 3. | கண்ணன் கூத்தனார் |
| (d) | நான்மணிக்கடிகை | 4. | பெருவாயின் முள்ளியார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

95. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | திருநாவுக்கரசர் | 1. | எட்டாம் திருமுறை |
| (b) | சம்பந்தர் | 2. | ஏழாம் திருமுறை |
| (c) | சுந்தரர் | 3. | முதல் மூன்று திருமுறை |
| (d) | மாணிக்கவாசகர் | 4. | 4, 5, 6 திருமுறை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

96. பொருந்தாத இணையை கண்டறி

(A) சிறுபஞ்சமூலம் – காரியாசன்

(B) ஞானரதம் – கல்கி

(C) எழுத்து – சி.சு. செல்லப்பா

(D) குயில்பாட்டு – பாரதியார்

97. ‘தமிழ்ச் செய்யுட் கலம்பகம்’ என்ற நூலைத் தொகுத்தவர்

(A) வீரமாமுனிவர்

(B) எல்லீஸ்

(C) ஜி.யு. போப்

(D) கால்டுவெல்

98. தமிழ்ப் பேரகராதி – 'லெக்சிகன்' (Lexicon) உருவாக்கியவர்

(A) எஸ். வையாபுரிப்பிள்ளை

(B) வ. உ. சி.

(C) அ. சிதம்பரநாத செட்டியார்

(D) வேங்கட ராஜுலு ரெட்டியார்

99. தமிழிசைக்கருவி 'யாழ்' பற்றி பலகாலம் ஆராய்ந்து 'யாழ் நூல்' இயற்றியவர்

(A) சண்முகானந்தர்

(B) விபுலானந்தர்

(C) தேஜானந்தர்

(D) கஜானந்தர்

100. பாரத சக்தி மகா காவியம் இயற்றியவர்

(A) சோமசுந்தர பாரதியார்

(B) சுத்தானந்த பாரதியார்

(C) மகாகவி பாரதியார்

(D) பாரதிதாசன்